


Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 5, 2023

வெள்ளிக்கிழமை, மே 05, 2023 | ஒளி: 08 கதிர் 264 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | free


**விழிப்புடன் தியானத்தில் அமர்ந்து துறவு பூண்டு முழுஞானம் பெற்றவரை தேவரும் விரும்பு கிறார்கள். (தர்மபோதனை)**

## போராட்டக்காரர்களை முடக்கி

# தையிட்டியில் தடுப்பு வேலி

### கஜேந்திரன் எம்.பி உள்ளிட்டோர் கடும் போராட்டம்

### பெண் உள்ளிட்ட ஐவர் கைது

### மருந்து, உணவு கொண்டு செல்ல அனுமதி மறுப்பு

### விஹாரையை சுமந்திரன், மாவை பார்வை

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கில் உள்ள காணிகளை விடுவிக்குமாறு கோரி போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண் உள்ளிட்ட ஐவர் பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர். விஹாரைக்கு முன்பாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் நிலையில், புதன்கிழமை இரவு முதல் குறித்த பகுதிக்குள் வெளியாட்கள் எவரும் செல்ல முடியாதவாறு தடைகளை பொலிஸார் ஏற்படுத்தி இருந்தனர்.

தொடர்ச்சி P2



## வேதனையான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்

### தென்கொரியாவில் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

கடந்த காலத்திலிருந்து பாடம் கற்று, வேதனையான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறோம் என்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்கையில்

## நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்க வேண்டும்

### சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு



உள்நாட்டுக் கடனை மறுசீரமைப்பதற்கு இலங்கை தீர்மானிக்கும் போது, நிதி ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதை நாடு உறுதி செய்ய வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடன் நிலைத்தன்மை என்பது மிகப் பெரிய சவாலாக உள்ளது என்ற எளிய காரணத்துக்காக தனியார் கடனாளிகள், உத்தியோகபூர்வ கடனாளிகள் மற்றும் ஓரளவுக்கு உள்நாட்டுக் கடன் உள்ளிட்ட அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் கடனை மறுசீரமைப்பதை உள்ளடக்கியது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## பதில் அமைச்சர்கள் இருவர் பதவியேற்பு

பதில் நிதி அமைச்சராக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்கவும் பதில் பாதுகாப்பு அமைச்சராக இராஜாங்க அமைச்சர் பிரேமித பண்டார தென்னகோனும் வியாழக்கிழமை (04) பதவிப் பிரமாணம் செய்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

அமெரிக்க டொலரின் பெறுமதி வீழ்ச்சியுடன் உள்ளூர் சந்தையில் தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் விலை மீண்டும் சரிந்துள்ளதாக கொழும்பு செட்டியார் தெரு தங்க வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2





## 20 இலட்சம் முட்டைகள் துறைமுகத்தில் தேக்கம்

பல நாட்களுக்கு முன்னர் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 20 இலட்சம் முட்டைகள் தேவையான அனுமதிகள் இதுவரை கிடைக்கப் பெறாமையால் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாகவும் இந்த தாமதம் பல விளைவுகளை ஏற்படுத்தும் என்று அரச வர்த்தக கூட்டுத்தாபனம் தெரிவிக்கிறது.

தொடர்ச்சி P2

இலங்கை மத்திய வங்கி சட்டமூலம்

## மே 11இல் 2ஆம் மதிப்பீடு மீதான விவாதம்

இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் எதிர்வரும் 11 ஆம் திகதி இடம்பெறவுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, வியாழக்கிழமை (04) தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, பாராளுமன்றம் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதி வரை கூடவுள்ளதுடன், வாய்மூல விடைக்கான வினாக்களுக்காக 9 ஆம் திகதி மாத்திரம் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மே 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி

தொடர்ச்சி P2



## கைதிகளை சந்திக்க 2 நாட்கள் சந்தர்ப்பம்

வெசாக் பௌர்ணமி தினத்தையொட்டி, வெள்ளி (05) மற்றும் சனிக்கிழமை (06) சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை உறவினர்கள் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கைதிகளின் உறவினர்களால் வீடுகளில் இருந்து கொண்டு செல்லப்படும் உணவுப்பொதி மற்றும் இனிப்புப் பண்டங்களை ஒருவருக்கு போதுமான அளவில் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக திணைக்களம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## பொது மக்களுக்கு எச்சரிக்கை



கொரோனா தொற்று பரவல் மற்றும் இன்புளுவன்சா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டில் கண்டறியப்பட்டதன் காரணமாக சுகாதார வழிகாட்டுதல்களை தொடர்ந்து பின்பற்றுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளது.

தற்போது நாட்டின் பல பகுதிகளில் இருந்து தினமும் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டு வருவதாகவும், வெளிப்புற நடவடிக்கைகள் ஈடுபடும் பொதுமக்கள் சுகாதார

தொடர்ச்சி P2

யாழ். ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து

## வெளிநடப்பு செய்து தையிட்டிக்கு விஜயம்

நிதர்ஷன் வினோத்



யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து வியாழக்கிழமை (04) கூட்டாக வெளிநடப்பு செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வலிகாமம் வடக்கு தையிட்டி விஹாரை பகுதிக்கு கூட்டாக வருகை தந்தனர்.

எம்.பிக்களான சி.சிறிதரன், த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்டோர் குறித்த பகுதிக்கு

தொடர்ச்சி P2

உலகவங்கியின்

## புதிய தலைவராக அஜய் பங்கா தெரிவு



உலக வங்கியின் புதிய தலைவராக இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அஜய் பங்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

63 வயதான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமெரிக்க பிரஜையான அஜய் பங்கா, உலக வங்கியின் 14 ஆவது தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், பொருளாதார நிபுணர் மற்றும் டிரம்ப் அரசாங்கத்தில் பணியாற்றிய அமெரிக்க திறைசேரியின் அதிகாரியுமான இவர் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனால் பரிந்துரைக்கப்பட்டார்.

தற்போதைய தலைவரான டேவிட் மல்பாஸின் பதவிக்காலம் ஜூன் 1ஆம் திகதியுடன்

தொடர்ச்சி P2

## தீர்வுகளை வழங்க இந்த அரசாங்கம் விரும்பவில்லை



கலந்துரையாடலுக்கான நேரத்தை வழங்காமல் ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறியுள்ளமை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் கோரிக்கைகளுக்கு இந்த அரசாங்கம் தீர்வுகளை வழங்க விரும்பவில்லை என்பதைக் காட்டுவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தர விடைத்தாள் திருத்தும் பணிகள் குறித்த பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு நேரம் வழங்குமாறு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்த போதிலும் நேரம் வழங்காமல் ஜனாதிபதி சென்றுள்ளதாக சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## வேதனையான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றோம்

தென் கொரியாவின் இன்சியோனில் நடைபெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 56 ஆவது வருடாந்தக் கூட்டத்திலேயே இந்த விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய சவால்களை எதிர்கொள்ள அதிக பாதிப்புக்குள்ளான நாடுகளுக்கு வழிகாட்டுவதில் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற பிராந்திய வளரும் பங்காளிகள் ஒரு பெரிய பங்கை வகிப்பார்கள் என்று தான் நம்புவதாகக் குறிப்பிட்டார்.

2022 ஆம் ஆண்டில் அதன் சொந்த நிதியில் இருந்து 20.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியதன் மூலம், கொரோனா தொற்றுநோயிலிருந்து மீள்வதற்கு அதன் உறுப்பு நாடுகளை மேம்படுத்த உதவுவதில் வங்கியின் முயற்சிகளை தான் பாராட்டுவதாகவும் குறிப்பிட்டார்.

இதுவரை நாம் அடைந்துள்ள சிறிய முன்னேற்றத்தில் திருப்தி அடைய முடியாது என்றும் இந்த அபிவிருத்தியை நிலைநிறுத்துவது தங்கள் முன்னால் உள்ள பணியாகும் என்று குறிப்பிட்டார்

கடந்த காலத்திலிருந்து பாடம் கற்று, வேதனையான சீர்திருத்தங்களை மேற்கொண்டு வருகிறோம் என்றும் பொருளாதாரத்தை மாற்றுவதற்கான அடிப்படை அடித்தளத்தை நாங்கள் அமைத்துள்ளோம் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், பெரிய பொருளாதார சவால்களை எதிர்கொள்ளவும் ஒரு விரிவான பொருளாதார சீர்திருத்த திட்டத்தை ஆரம்பித்ததாகவும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்துக்கு இணங்க கடனைத் தீர்ப்பதற்கு இலங்கை தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் இருப்பதாக தெரிவித்த அவர், கடன் அழுத்தத்தில் உள்ள நாடுகளுக்கு அர்த்தமுள்ள கடன் நிவாரணப் பொதியை ஒப்புக்கொள்ளுமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுக்கொள்வதாகக் குறிப்பிட்டார்.

## நிதி ஸ்திரத்தன்மை பாதுகாக்க வேண்டும்

சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா சீனிவாசன் மேற்குறிப்பிட்ட விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கடன் தாங்க முடியாதது என்று மதிப்பிடப்பட்டதாகவும் இலங்கைக்கான ஐஎம்எப் திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு முன்னரே, நிலைத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பாதையின் தேவை இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வருமான திரட்டல், வரி வசூலித்தல் போன்றவை குறைவாக உள்ள நாடுகள் மத்தியில் இலங்கை இருப்பதாலும் தொற்றுநோய்க்கு முன் அவர்கள் செய்த கொள்கைத் தவறுக்கு இதுவே காரணம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதில் வற்வரி, பன்நாட்டு வரி மற்றும் தனிநபர் வருமான வரி என்று பலவகையிலும் வரிகளை குறைப்பதாகவும் குறிப்பிட்டார்.

'நிதி ஆதரவு திட்டத்துக்காக நாணய நிதியத்தை இலங்கை அணுகியதாக குறிப்பிட்ட அவர், பெரிய பொருளாதார நிலைப்படுத்தலுக்கு முக்கியத்துவம் அளித்து, பணவீக்கத்தைக் குறைத்து, மீண்டும், நிதி ஒருங்கிணைப்பு வருமான அடிப்படையிலான ஒருங்கிணைப்பை நதி ஆதரவுத் திட்டங்கள் அடிப்படையாக கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

பணவீக்கம் உயர் மட்டங்களில் இருந்தும் குறைந்துள்ளது எனவும் பணவீக்கம் நிரந்தரமாகக் குறைய வேண்டும் என்றும் தெரிவித்த அவர், பணவீக்கம் என்பது ஏழைகள் மற்றும் ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீது விதிக்கப்படும் மிக மோசமான மறைமுக வரி என்பதை மறந்துவிடக் கூடாது என்றார்.

பணவீக்கத்தைக் கட்டுக்குள் கொண்டு வர விரும்புகிறீர்கள் என்றால் அதனால் பணக் கொள்கையின் அடிப்படையில், நிதிக் கொள்கையின் ஆதரவுடன், பணவீக்கத்தை நியாயமான நிலைக்குக் குறைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

## 20 இலட்சம் முட்டைகள் துறைமுகத்தில் தேக்கம்

ஆய்வக சோதனைகளுக்காக கையிருப்பில் இருந்து பெறப்பட்ட மாதிரிகள் பல நாட்களுக்கு முன்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்ட போதிலும், திணைக்களம் இன்னும் அனுமதி வழங்கவில்லை.

விலைவாசி உயர்வு மற்றும் உள்ளூர் சந்தையில் முட்டை தட்டுப்பாடு காரணமாக முட்டைகளை இறக்குமதி செய்வதற்காக அமைச்சரவை வழங்கிய அனுமதியை அடுத்து, இந்தியாவில் இருந்து இதுவரை 50 இலட்சத்துக்கும் அதிகமான முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

. இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை ஹோட்டல் உரிமையாளர்கள் மற்றும் பேக்கரி உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு முன்னர், முட்டைகளிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளை அனுமதியைப் பெறுவதற்காக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்துக்கு தொடர்ந்து அனுப்புவதாக வர்த்தக கூட்டுத்தாபனம் கூறியது.

சந்தையில் போதுமான முட்டைகள் கிடைக்கும் வரை, அமைச்சரவையின் அனுமதியுடன் முட்டைகளை இறக்குமதி செய்வது தொடரும் என்றும் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

## புதிய தலைவராக அஜய் பங்கா தெரிவு

முடிவடையும் நிலையில், அஜய் பங்கா ஜூன் 2 ஆம் திகதி தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளார்.

அஜய் பங்கா சுமார் 24 ஆயிரம் பணியாளர்களைக் கொண்ட உலகளாவிய அமைப்பான மார்ஸ்டர் காட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றியுள்ளார்.

# தையிட்டியில் தடுப்பு வேலி



இந்நிலையில் எவ்வித குற்றசாட்டுக்களும் இன்றி பெண் உள்ளிட்ட ஐவர் பலாலி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

புதன்கிழமை (04) அதிகாலை போராட்டத்தில் ஈடுபட்டு வரும் எம்.பிக்கள் உள்ளிட்ட சிலரை பார்க்க சென்றவர்களில் இருவர் கைது செய்யப்பட்டதாகவும் கைதுக்கான காரணம் இதுவரை பொலிஸார் தரப்பில் இருந்து தெரிவிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கு தையிட்டியில் சட்டவிரரோதமாக அமைக்கப்பட்டுள்ள விகாரையை அகற்றுமாறு வலியுறுத்தி புதன்கிழமை (03) மாலை முதல் போராட்டம் இடம்பெற்று வருகிறது.

இந்நிலையில் புதன் இரவு முதல் போராட்டகாரர்களை அச்சுறுத்திய பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

குறிப்பாக அப்பகுதிக்குள் ஊடகவியலாளர்கள் உட்பட பொதுமக்கள் யாரும் நுழையமுடியாதவாறு பொலிஸார் வாகனங்களை வீதிக்கு குறுக்கே நிறுத்தி தடையேற்படுத்தினர்.

இந்நிலையில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் செ.கஜேந்திரன் எம்.பி, சட்டத்தரணி ந.காண்டீபன் உள்ளிட்ட சிலர் பொலிஸாருடன் வாதம் புரிந்த நிலையில் போராட்டக்களத்தில் முற்றுகைக்குள்ளாகினர்.

இதன் காரணமாக அப்பகுதியில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

வலிகாமம் வடக்கு தையிட்டி பிரதேசத்தில் இதுவரை காலமும் விடுவிக்கப்படாமல் உள்ள பொதுமக்களின் காணிக்குள் அமைக்கப்பட்டு வருகின்ற பௌத்த விகாரைக்கு மேலதிகமாக அதனை சுற்றியுள்ள பொதுமக்களின் காணிகளும் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

இதனை எதிர்க்கும் முகமாக பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பாக பொதுமக்களும் பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் ஒன்றிணைந்து புதன்கிழமை (03) கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டதுடன், அதனை தொடரச்சியாக மூன்று நாட்களுக்கு முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

வெசாக் தினமான இன்று (05) வெள்ளிக்கிழமை வரையில் தொடர் போராட்டத்தை முன்னெடுப்பதற்காக குறித்த பகுதியில் பந்தல் அமைக்க முற்பட்ட நிலையில், பொலிஸார் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டனர்.

இந்த நிலையில் தனியார் காணியொன்றில் பந்தல் அமைக்க முயன்றபோதும் அதற்கு இடமளிக்காத பொலிஸார் பந்தல் காரர்களை அச்சுறுத்தியதுடன் பந்தல்களையும் கைப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

போராட்டகாரர்களை அச்சுறுத்தி பொலிஸார் அவர்களை அங்கிருந்து அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட சிலருக்கு வெளியில் இருந்து உணவு, நீர், மருந்து என்பவற்றை எடுத்து செல்ல அனுமதிக்காத பொலிஸார், சில மணி நேரங்களுக்கு பின் மனித உரிமை ஆணைக்குழுவின் தலையீட்டால் உணவு, நீர், மருந்து என்பவற்றை எடுத்துச் செல்ல அனுமதித்தனர்.

எவ்வாறாயினும் குறித்த விஹாரைக்கான கட்டுமானப்பணிகள் தற்போது முழுமைப்படுத்தப்பட்டு கலசம் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபடும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டவர்களை எம்.ஏ சுமந்திரன் எம்.பி மற்றும் முன்னாள் எம்.பியான மாவை சேனாதிராஜா ஆகியோர் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது சட்டவிரோதமாக கட்டப்பட்டு வரும் விஹாரையையும் பாராளுமன்ற உறுப்பினர் எம் ஏ சுமந்திரன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோர் பார்வையிட்டனர்.

அத்துடன், போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தங்களுக்கான உரிமைகள் மறுக்கப்படுவதாகவும் மருந்து உணவுப்பொருட்கள் என்பவற்றை உள்ளே கொண்டு வருவதற்கு பொலிஸார் அனுமதி வழங்கவில்லை என்றும் போராட்டக்காரர்கள் எடுத்துரைத்தனர்.

## மே 11இல் 2ஆம் மதிப்பீடு மீதான விவாதம்

முதல் பி.ப. 5.00 மணி வரை இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் செஸ் வரி தொடர்பான கட்டளை, துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் 8 கட்டளைகள், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் 3 ஒழுங்குவிதிகள் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் என்பன விவாதத்தை அடுத்து அனுமதிக்கப்படவுள்ளன.

அதனையடுத்து, பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான விவாதம் இடம்பெறும்.

மே 10 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை 'எக்ஸ்-பிரஸ் பேர்ல்' கப்பல் விபத்து தொடர்பில் எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு அமைய சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

மே 11 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

அதனையடுத்து தனியார் உறுப்பினர் சட்டமூலமான ரதனதிஸ்ஸ சமாதான மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலத்தை இரண்டாம் மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மே 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 6.00 மணி வரை நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

## தீர்வுகளை வழங்க இந்த அரசாங்கம் விரும்பவில்லை

பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், விடைத்தாள் திருத்தும் பணி மோசமடைந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

ஒரு வாரத்துக்கு முன்னரே கலந்துரையாடலுக்கு நேரம் கோரியிருந்த போதும் அதை நடத்தாமல் நாட்டை விட்டு வெளியேறுவது நியாயமில்லை என்று தெரிவித்தார்.

இந்த விடயத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் கடுமையான தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றும் இப்பிரச்சினைக்கு இந்த அரசாங்கம் எந்த தீர்வையும் வழங்க விரும்பவில்லை என்பதையே இது காட்டுகிறது என்றும் குறிப்பிட்டார்.

## பதில் அமைச்சர்கள் இருவர் பதவியேற்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை (04) காலை ஐக்கிய இராச்சியம் சென்றதை அடுத்தே, பதில் அமைச்சராக ஷெஹான் சேமசிங்க நியமிக்கப்பட்டுள்ளார் என்று நிதியமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பன தெரிவித்தன.

ஜனாதிபதியின் வசம் இருந்த பாதுகாப்பு மற்றும் நிதி அமைச்சுகளுக்கான பதில் அமைச்சர்களாக விடயதாகத்துக்கு பொறுப்பான இராஜாங்க அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியாவின் மூன்றாம் சார்லஸ் மன்னரின் முடிசூட்டு விழா லண்டனில் சனிக்கிழமை நடைபெறவுள்ள நிலையில் அதில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி பிரித்தானியாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஜனாதிபதியுடன் மேலும் 8 பேர் நாட்டிலிருந்து பயணித்துள்ளதாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

## தங்கத்தின் விலை வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் விலை வீழ்ச்சி என்பனவே இந்த விலைக் குறைப்புக்குக் காரணம் என்றும் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய 22 கரட் தங்க பவுணின் விலை 165 ஆயிரம் ரூபாயாகவும் 24 கரட் தங்கத்தின் விலை 182,000 ஆயிரம் ரூபாயாகவும் பதிவாகியுள்ளது.

உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை 2023ஆம் ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விலையிலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநடப்பு செய்து தையிட்டிக்கு விஜயம்

விஜயம் செய்து விஹாரையை பார்வையிட்டனர்.

மேலும், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்டவர்களுடனும் கலந்துரையாடி போராட்டத்துக்கு ஆதரவு வழங்கினர்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், யாழ் மாவட்ட செயலகத்தில் வியாழக்கிழமை (05) இடம்பெற்றது.

சமகாலத்தில், காங்கேசன்துறை தையிட்டியில் அனுமதியின்றி கட்டப்பட்ட விஹாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் உட்பட மக்களால் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

அவர்களை பாதுகாப்பு தரப்பு முற்றுகையிட்டுள்ளமையை கண்டித்தும், மக்களின் காணிகளை ஆக்கிரமித்து அனுமதியின்றி அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வெளிநடப்பு செய்வதாக சுமந்திரன் எம்.பி. கூட்டத்தில் அறிவித்தார்.

இதனையடுத்து சக பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறிதரன், த.சித்தார்த்தன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரும் வடமாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானமும் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

இந்நிலையில் கூட்டாக வெளிநடப்பு செய்த பாராளுமன்ற உறுப்பினர்கள் வலிகாமம் வடக்கு தையிட்டி விகாரை பகுதிக்கு கூட்டாக வருகை தந்தனர்.

## பொது மக்களுக்கு எச்சரிக்கை

வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டும் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

தற்போது நோய் பரவும் அபாயம் இல்லையென்றாலும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது குறைந்த அளவிலேயே இருந்தாலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது சிறந்தது என்று சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்தார்.

பாரிய சோதனைகள் நடத்தப்படாததால், வைரஸ் பரவுவது குறித்து மிகத் தெளிவான தகவலைப் பெற முடியாது என்றும் இலங்கையில் கொரோனா வைரஸ் இன்னும் பரவலாக உள்ளது என்று வலியுறுத்தினார்.

**"கொரோனா தொற்று பரவல் மற்றும் இன்புளுவன்சா நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் நாட்டில் கண்டறியப்பட்டதன் காரணமாக சுகாதார வழிகாட்டுதல்களை தொடர்ந்து பின்பற்றுமாறு பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பொது மக்களிடம் வலியுறுத்தியுள்ளது**

சுவாச மண்டலத்தை பாதிக்கும் இன்ஃப்ளுயன்ஸா நோய்களும் தற்போது அதிகமாக இருப்பதாக அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## கைதிகளை சந்திக்க 2 நாட்கள் சந்தர்ப்பம்

சிறைச்சாலைகள் சட்டதிட்டங்களுக்கு அமைய உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உறவினர்களைப் பார்வையிடும் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளாலும் இந்த வசதி செய்யப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் சந்தன ஏகநாயக்க தெரிவித்தார்.

# பிள்ளைகளுடன் நட்புறவுடன் பழகுங்கள்



நூருல் ஹுதா உமர்

கல்முனை கிரீன் பீல்ட் ரோயல் பாடசாலையில் தரம் 1 க்கு மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா புதன்கிழமை (03) பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை கோட்டக் கல்விப் பணிப்பாளரும், கல்முனை கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இதன்போது "இறைவன் எமக்கு வழங்கியிருக்கும் விலைமதிப்பற்ற செல்வமாக எமது குழந்தைகள் இருக்கிறது. கனவுகளை சுமந்துகொண்டு இன்று பாடசாலை மாணவர்களாக வருகை தந்திருக்கும் இவர்கள் நாளைய தலைவர்கள்.

இந்த தலைவர்களை ஒழுங்கானவர்களாக உருவாக்க வேண்டியது சமூகத்தின் கடமை. இதில் ஏனையோரை விட பெற்றோருக்கு பாரிய பங்கிருக்கிறது.

பிள்ளைகள் வழிதவறிச் செல்லக் காரணமாக இருப்பது பெற்றோரின் கடும்போக்கான தன்மையும், அதிகரித்த தொலைக்காட்சி பாவனையுமே ஆகும்.

பாடசாலையில் ஆசிரியர்கள், அதிபர்கள் ஒழுக்கத்தை கற்பித்தாலும் கூட தொலைக்காட்சி மற்றும் தொலைபேசி பாவனை என்பன அதை சீரழித்து விடுகின்றன . அவர்களை நாம் சரியான பாதையில் வழிநடத்தினால் மட்டுமே அவர்கள் சிறந்த பிரஜைகளாக உருவாகுவார்கள்.

எனவே பெற்றோர் பிள்ளைகளுடன் நட்புறவுடன் பழக வேண்டும்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்த்தர் பலி

ஆர்.ஜெயஸ்ரீராம்

கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் வாகநேரி பகுதியில் காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்த்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஒரு பிள்ளையின் தந்தையான க.ஜெயந்தன் என்ற 24 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம்(03) மாலை வழக்கம் போல் பணி முடிந்து வீடு திரும்பும் போதே அப்பகுதியில் இந்த யானையொன்று இவரைத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்து காணப்படுவதாகவும் கடந்த 3 நாட்களுக்கு முன்பும் வீதியால் சென்ற நபர் ஒருவரை துரத்தி துரத்தி தாக்கியதாகவும் அதிஸ்டவசமாக அவர் யானையின் தாக்குதலில் இருந்து உயிர் தப்பியதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். காட்டுயானைகளால் தாங்கள் பல்வேறான துன்பங்களை அனுபவித்து வருகின்றோம். விவசாயத்தை அழிக்கின்றது. பலன்தரும் மரங்களை துவசம் செய்கின்றது. கிராமங்களுக்குள் புகுந்து வீடுகளையும் கட்டடங்களையும் நாசம் செய்கின்றது. ஆகையால், யானை வேலி அமைத்து தமக்கு பாதுகாப்பு வழங்குமாறு காட்டு யானைகளிடம் இருந்து தங்களை காப்பாற்றுமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

# "உதிரமீந்து உயிர்காப்போம்"

எம்.எஸ்.எம்.நூர்தீன்



மட்டக்களப்பு மாவட்டத்தின், போரதீவுப்பற்று, வெல்லாவெளி பிரதேசசெயலகம் மற்றும் போரதீவுப்பற்று பிரதேச இளைஞர்கழகங்களின் சம்மேளனமும் இணைந்து சுவிஸ் உதயம் எனும் நிறுவனத்தின் அனுசரணையில் "உதிரமீந்து உயிர்காப்போம்" எனும் தொனிப்பொருளில் இரத்த தான நிகழ்வொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்நிகழ்வானது போரதீவுப்பற்று பிரதேசசெயலக ஒன்று கூடல்மண்டபத்தில் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.



# பாரிய மண்மேடு சரிவு: மக்கள் அவதி

நடராஜா மலர்வேந்தன்

பதுளை மாவட்டத்தில் நிலவுகின்ற மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக குருவிகொல பிரதேசத்தில் பாரிய மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளதால், மடுல்சீமை - பிட்டமாருவ வீதி மற்றும் மடுல்சீமை எகிரிய ஆகிய வீதிகளின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. இதன்காரணமாக எக்கிரிய மற்றும் பிட்டமாறுவ வரையான போக்குவரத்து பாதிப்படைந்துள்ளது.

# மகளுக்கு நஞ்சு; தந்தை கைது

செ.தி.பெருமாள்

20 வயதான மகளுக்கு நஞ்சு கொடுத்த குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள மொக்கா தோட்ட மேற் பிரிவைச் சேர்ந்த நபர் ஒருவரைப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட யுவதி டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில் சட்ட வைத்திய அதிகாரியிடம் தனது தந்தை தனக்கு நஞ்சு பருக்கியதாகக் கூறியுள்ளார்.

அதே சமயம் குறித்த யுவதி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து யுவதியின் தந்தையை அவரது உறவினர் ஒருவரின் வீட்டில் வைத்து சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ள பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவம் குறித்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார கூறுகையில் "சம்பந்தப்பட்ட யுவதியின் தாய் கடந்த 7 மாதங்களுக்கு முன்பு வெளிநாடு சென்றுள்ளார். அவருக்கு 9,11,20ஆகிய வயதுகளில் 3 பெண் பிள்ளைகள் உள்ளனர். இவ்வாறு பெண் பிள்ளைகளை தந்தையின் பாதுகாப்பில் விட்டு செல்வதால் பல குற்ற செயல்கள் இடம் பெற்று வருகின்றன என்றார்.

## ஊடகவியலாளருக்கு எதிரான வழக்கு

# புலனாய்வாளருக்கு அழைப்பாணை

முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலன் மீது முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை அதிகாரி தொடர்ந்த வழக்கில், கடற்படை புலனாய்வாளருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டதுடன், வழக்கு 21.09.2023க்கு தவணையிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு முதல் இடம்பெற்று வரும் வழக்கு விசாரணை, முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி சரவணராஜா முன்னிலையில் , புதன்கிழமை (04) விசாரணைக்கு அழைத்தபோதே தவணையிடப்பட்டுள்ளது,

முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி ஒருவர் முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் சண்முகம் தவசீலனுக்கு எதிராக செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதியின் சார்பில் சட்டத்தரணி வி. எஸ். எஸ். தஞ்சயன் முன்னிலையாகியிருந்தார். மனுதாரரான முல்லைத்தீவு கோட்டாபய கடற்படை முகாம் கடற்படை புலனாய்வு அதிகாரி வருகைதராமையால், தவணையிடப்பட்டுள்ளது.

07.04.2019 அன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலத்தில் இருந்து வட்டுவாகல் பாலம் வரை கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை நடத்தியிருந்தார். அதன்போது படம்பிடித்த, புலனாய்வு அதிகாரியின் சார்பிலேயே வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



# மகா கும்பாபிஷேகம்



கிளி நொச்சி கண்டாவளை கோணங்குளம் பதியில் அமைந்துள்ள கற்பக விநாயக ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் சாந்தி பூசைகள் இடம் பெற்றன.

எண்ணெய் காப்பு சாத்தும் வைபவத்தை தொடர்ந்து வியாழக்கிழமை (04-05-02023) காலை 7 மணிக்கு கிரியைகள் நடைபெற்று பிரதான கும்பம் யானையில் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு கும்பாபிஷேக நிகழ்வுகள் நடைபெற்றன.

(யது பாஸ்கரன்)



# இரத்ததான நிகழ்வு

வி.ரி.சகாதேவராஜா

காரைதீவு விபுலாநந்தா மத்திய கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவு பவளவிழாவினை சிறப்பிக்கும் வகையில், இரத்ததான நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர்கள் ஒன்றியம், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை இரத்தவங்கி பிரிவுடன் இணைந்து நடாத்தும் *"உதிரம் கொடுத்து உயிர் காப்போம்"* இரத்ததான நிகழ்வானது இன்று (5) வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கிறது.

இரத்த தான நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் மண்டபத்தில் காலை 9 மணி முதல் இடம்பெறும்.

வைத்தியசாலைகளில் தற்போது நிலவும் குருதித் தேவைப்பாட்டினை கருத்தில்கொண்டு குருதிக் கொடையாளர்கள் அனைவரும் வருகைதந்து உதவுமாறு பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் லோ.சுலக்ஷன் கோரிக்கை விடுத்தார்.

# காதலி படுகொலை: காதலன் தப்பியோட்டம்

ஷேன்செனவிரத்ன

காதலியைப் படுகொலை செய்து விட்டு காதலன் தலைமறைவாகியுள்ள சம்பவமொன்று கண்டி, பல்லேகல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

காலபுரநத்தரம் பொத்தபிரதேசத்தில் உள்ள வீடொன்றிலேயே கடந்த புதன்கிழமை (03) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பிலிமத்தலாவை வசிப்பிடமாகக் கொண்ட வருணி நிரோஷா என்ற பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மரம் நடும் விழா

தேசிய மாணவர் படையணியின் 142வது ஆண்டு நிறைவினையொட்டி தேசிய ரீதியிலான மரம் நடும் வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வேலைத் திட்டத்திற்கமைவாக அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் உள்ள கடேற் அணியினரால் பாடசாலை வளாகத்தில் பயன் தரும் மரங்கள் நாட்டப்பட்டுள்ளன.

# வருடாந்த பொதுக்கூட்டம்

சாவகச்சேரி நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகர் தேவஸ்தான 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இக்கூட்டத்தில் தலைமையுரை,செயலாளர் கூட்ட அறிக்கை சமர்ப்பிப்பு ,பொருளாளர் கணக்கறிக்கை சமர்ப்பிப்பு,கிராமசேவகர் உரை,,கலாசார உத்தியோகத்தர் உரையைத் தொடர்ந்து புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

# ஆசிரியருக்கு ஆதரவு தெரிவித்து ஆர்ப்பாட்டம்

க. அகரன்

தரணிக்குளம் கணேசுவரா வித்தியாலத்தின் தமிழ்பாட ஆசிரியர் தொடர்பாக சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டு வரும் போலியான தகவலுக்கு எதிராக பாடசாலை சமூகத்தால் ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றுக் காலை பாடசாலைக்கு முன்பாக குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த ஆர்பாட்டகாரர்கள்

எமது பாடசாலையின் தமிழ்பாட ஆசிரியரான திருமகன் மீது அண்மைகாலமாக தவறான கருத்துக்கள் சமூக வலைத்தளங்களிலே பதியப்பட்டுவருகின்றது. அதற்கு எமது எதிர்ப்பினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அத்துடன் சமூகத்திற்கு ஏற்பட்ட பிரச்சனை ஒன்றை தட்டிக்கேட்டதற்காக இழிவான முறையில் அவர் பழிவாங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

அந்த விடயத்தை பாடசாலை சமூகம் சார்பாக வன்மையாக கண்டிப்பதோடு குறித்த நபர்களுக்கு எதிராக உடனடியாக சட்டநடவடிக்கை எடுத்து ஆசிரியருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை துடைக்கவேண்டிய கட்டாயநிலமையில் நாம் இருக்கின்றோம்.

ஒருதகவலின் உண்மைத்தன்மை தொடர்பாக ஆராயாமல் அதனை பலரும் பகிர்வு செய்தமையானது மோசமான ஒரு முன்னுதுராணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. எனவே இனியாவது உண்மைதன்மையினை உணர்ந்துசெயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றனர்.

இவ் ஆர்பாட்டத்தில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.



# தலை தூக்கும் முன்னர் எச்சரிக்கையாக இருப்போம்

மனிதர்களில் சிலருக்கு அவ்வப்போது அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்துக்கொண்டே இருக்கவேண்டும். இல்லையேல், தாம் நினைத்தபடி நடந்துகொள்வர். இதனூடாக தங்களுக்குத் தாங்களாகவே விளைவுகளைத் தேடிக்கொள்வர்.

பலமுறை சுட்டிக்காட்டியதைப் போல, இயற்கையின் மீது தங்களுடைய அடாவடித்தனங்களை காண்பித்து இயற்கையின் கோர தாண்டவத்துக்குள் சிக்கிக்கொள்வர். பெரும் தொற்றுக்களுக்கும் இலக்காகிவிடுவர்.

மழை காலத்துக்கு முன்னர், சுற்றாடலை சுத்தமாக வைத்துக்கொள்ளாமல் விடுவதன் ஊடாக, நுளம்புகள் பெருகி, பல்வேறான காய்ச்சல்களுக்கு வழிசமைத்துவிடும். எனினும், முன்கூட்டிய ஏற்பாடுகளின் ஊடாக டெங்கு காய்ச்சல் பரவாமல் தற்பாதுகாத்துக்கொள்ள முடியும்.

கிராமங்கள், பெருந்தோட்டங்கள் மற்றும் நகரங்களுக்கு வெளியே, டெங்கு நுளம்புகளின் தாக்கம் குறைவாகும். எனினும், நகர்புறங்களை பொறுத்தவரையில், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 33 சிறுவர்கள், பொரளை சீமாட்டி வைத்தியாசலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் தெரிவிக்கின்றது. இந்நிலையில், புதிய வகையான காய்ச்சலும் பரவிக்கொண்டிருக்கின்றது. மற்றொரு புறத்தில் எலிக்காய்ச்சலும் வேகமாக தலையைத்தூக்குகின்றது.

கொழும்பு,கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களுக்கும் டெங்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று நாட்களுக்கு மட்டும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 700 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

தங்களுடைய வீட்டையும், வீட்டை சுற்றியும் மழைநீர், வீடுகளில் இருந்து வெளியேற்றப்படும் நீர் தேங்கி நிற்காதவகையில், சுற்றாடலை சுத்தப்படுத்திக்கொண்டால் மட்டுமே டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்க முடியும்.

ஒரு பக்கத்தில் மருந்துகளின் விலை அதிகரிப்பு, மறுபுறத்தில் பரிசோதனைகளுக்கான கட்டணங்கள் அதிகரிப்பு ஆகியவற்றை கவனத்தில் கொண்டு தங்களைத் தாங்கள் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அத்துடன் டெங்கு நுளம்பு தலையைத் தூக்குவதற்கு முன்னர், முளையிலேயே கிள்ளி எறியும் வகையிலான திட்டங்களை வகுத்துக்கொள்ளவேண்டும்.

டெங்கு நுளம்பு அதிகமாக பரவும் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய பிள்ளைகளை தூங்கவைக்கும் போது கட்டாயமாக நுளம்பு வலைகளை பயன்படுத்தவேண்டும். ஏனைய நேரங்களில் நுளம்புகள் கடிக்காத வகையில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னரே, முன்னேற்பாடுகளை செய்துகொள்வது அவசியம், ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருக்க நேரமில்லை. அரசாங்கத்தினால் ஒவ்வொரு தடவையும் அறிவுறுத்திக்கொண்டிருக்கவும் முடியாது. ஆகையால், டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்கும் வகையிலான தேசிய செயற்றிட்டங்களை முறையாக அமுல்படுத்தவேண்டும்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் அவ்வப்போது விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவேண்டும். அதுதொடர்பில் பாடசாலை மட்டங்களில் இதர செயற்பாடுகளை முன்னெடுத்தல் அவசியமாகும் என்பதை மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தனிமையும் இனியது; மக்களுடன் இணைவதும் இனிமையானது. இயற்றையுடன் ஒன்றித்தால் எல்லாமே இனிமையானது. பிரச்சினைகள் வரும்போது, தன்னைத்தான் ஆராயத் தனிமையின் உதவி பெரியது. எனினும் சிலரிடம் பிரச்சினைக்கு ஆலோசனை கேட்டால், அதுவே பிரமாண்டான துயரையும் தருவதாகி விடலாம். கேட்பவர்களிடம் தகைமை அறிந்து கேட்க வேண்டும். மனிதனின் குழப்ப நிலையை இயற்கைவளம் குறைத்து விடுகின்றது. உங்களுக்குப் பிடித்த இடங்களுக்குப் போகலாம். கடற்கரை, பரந்தவெள, பூஞ்சோலை, சுற்றுலாப் பணணம் எனப் பலவழிகளில் பிடித் ததைக் கண்டுகொள்வது நல்லது.

நெஞ்சத்தில் ஏதாவது சஞ்சம் ஏற்பட்டால், கோவில்களுக்கு மக்கள் செல்வதுண்டு. இன்னும் சிலர் தங்களுக்குப் பிடித்தமான பாடல்களைக் கேட்பார்கள். இசைக் கருவிகளைப் பயின்றால், உஸ்ணமான மனது குளிர்ந்துவிடும். பொழுது போவதே தெரியாது.

தேவையின்றி தனித்து இருப்பதும் வெறுமை உணர்வை ஏற்படுத்தலாம். நல்ல நட்புகளைத் தேடுங்கள். உலகப் பெருவெளயில், நாங்கள் மட்டும் பிரச்சினைகளுடன் வாழவில்லை. எல்லா விடயங்களிலும் திருப்பம் உண்டு. கவலை ஏன்?

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

வலது தீவிரவாதத்தின் நிழலில் – 25

# அதிவலதின் எதிர்காலம்: நாம் என்ன செய்ய வேண்டும்?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

உலகளாவிய ரீதியில் வலது தீவிரவாதம் அதிகரித்த வண்ணமுள்ளது. ஒருபுறம் பொருளாதார நெருக்கடிகள் அதிவலதுக்கான ஆதரவுத் தளத்தை அதிகரித்துள்ளன, மறுபுறம் அரசியல் மையநீரோட்டத்தின் பகுதியாக - இனத்துவம், மதம், மொழி, பிரதேசம், தேசியம் ஆகியவற்றின் வழி - இவை தம்மைக் கட்டமைக்கத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக பன்மைத்துவ சமூகங்களில் அதிவலதுக்கான ஆதரவுத்தளம் அதிகரித்துள்ளது. மத பன்மைத்துவம் சமூகக்கட்டமைப்பின் ஒரு பகுதியாக இருக்கும் பல்லின நாடுகள் தீவிர வலது சித்தாந்தங்களின் முக்கிய நீரோட்டத்தைக் காணவியலுமாகிறது.

உதாரணமாக, ஆசியாவில், பல நாடுகளில் சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறையும் அச்சுறுத்தல்களும் அதிகரித்து வருகின்றன. பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் கிறிஸ்தவ சிறுபான்மையினர், இந்தியாவில் முஸ்லிம் சிறுபான்மையினர், மலேசியாவில் சீன சிறுபான்மையினர், இலங்கையில் முஸ்லீம், கிறீஸ்தவ சிறுபான்மையினர். இங்கு பொதுவான அம்சம் யாதெனில் சிறுபான்மையினர் வெளியாட்கள், 'மற்றவர்கள்' என்று கருதப்படும் ஒரு ஒற்றை இன-மத அடையாளத்தின் அடிப்படையில் ஒரு தூய சமுதாயத்தை உருவாக்கும் விருப்பமே அடியாழமாக உள்ளது.

இத்தகைய சொல்லாட்சிகள் மேற்கத்திய நாடுகளில் வன்முறையான தீவிர வலதுசாரிக் குழுக்களால் பயன்படுத்தப்பட்டதை எதிரொலிக்கின்றன. குறிப்பாக வெள்ளை மேலாதிக்க தீவிரவாதிகள், அடிக்கடி இனவாத தவறான செய்திகளை விளம்பரப்படுத்த இதே வேலையைச் செய்கிறார்கள். சிறுபான்மையினர் மீதான தாக்குதல்களை நியாயப்படுத்துகிறார்கள்.

இன அல்லது இன ரீதியாக தூய்மையான சமூகத்திற்கான தேடலானது இந்த குழுக்களின் கதையாடல்களில் ஒரு முக்கியமான பொதுவான அங்கமாகும்.

கொரோனா பெருந்தொற்றும் அதைத் தொடர்ந்த உக்ரைன் யுத்தமும் ஆசியாவில் தீவிர வலதுசாரி சித்தாந்தங்களின் பரவலை விரைவுபடுத்த பயன்படுத்தப்படும் நிகழ்வுகளாகும். இந்தியாவில், இந்துத்துவா குழுக்களின் ஆதரவாளர்கள் வாட்ஸ்அப் குழுக்கள் மற்றும் சமூக ஊடகங்களில் முஸ்லிம்களை 'நோய்க்கொல்லிப் பரப்புனர்கள்' என்று குற்றம் சாட்டி, இந்துக்களுக்கு தொற்று ஏற்படுவதற்கான சதித்திட்டத்தில் முஸ்லிம் சமூகத்தை உட்படுத்துகின்றனர்.

இலங்கையிலும் முஸ்லீம்களுக்கெதிரான திட்டமிட்ட அவதூறுகள் பரப்பப்படுகின்றன. முஸ்லீம்களுக்கெதிரான கண்டி வன்முறையை நிறுத்த அரசாங்கம் வாட்ஸ்அப் பாவனையையே நிறுத்த வேண்டி ஏற்பட்டது நினைவிருக்கலாம்.

தீவிர வலதுசாரி வன்முறை தீவிரவாதத்தின் அப்பட்டமான எழுச்சியானது ஜனரஞ்சக அரசியலின் எழுச்சி மற்றும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உள்ள பன்மைத்துவ ஜனநாயகங்களுக்கு விடுக்கப்படும் சவால்களுடன் தொடர்புடையது. சிறுபான்மையினருடனான பதற்றம், காலனித்துவ கடந்தகால வரலாறுகள் ஆகியன பெரும்பாலும் அரசியல் ஆதாயத்திற்காக பயன்படுத்தப்பட்டு, அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் பெரும்பான்மை ஆட்சியைப் பாதுகாப்பதற்காக நிறுவப்பட்ட மத அரசியல் மையங்களுடன் கைகோர்க்க வேண்டியிருந்தது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இணையம் வழியாக தகவல் மற்றும் தவறான தகவல்களை அணுகும் சகாப்தத்தில், எதிர்ப்பு அல்லது விமர்சனத்தை அடக்குவதற்கு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தைப் பயன்படுத்திய நிகழ்வுகளுடன் இணைந்து அதிவலது அச்சுறுத்தலை அதிகப்படுத்தியுள்ளது.

உலகளாவிய தெற்கில் உள்ள பல நாடுகளில் பத்திரிகை சுதந்திரம் குறைந்து வருகிறது. அரசாங்கங்கள் பொது நிகழ்வுகளுக்கு ஊடக நிறுவனங்களின் அணுகலைக் கட்டுப்படுத்துகின்றன, பகிரங்கமாக பத்திரிகைகளைத் தாக்குகின்றன, சில சமயங்களில் அரசாங்கத்திற்கு பாதகமான செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்களை கைது செய்தல், குற்றஞ்சாட்டுதல் போன்றன நிகழ்கின்றன.

இந்த இயக்கவியல் இரண்டு விடயங்களைச் செய்கிறது. ஒன்று உரிமைகளுக்காக ஊடகக்குரல்கள் அடங்கிப் போகின்றன. இரண்டு, பெரும்பாலும் ஊடகங்கள் மற்றும் தகவல்தொடர்பு தளங்களில் அதிக தீவிரவாத நிலைகளை மேம்படுத்தவும் ஊக்கப்படுத்தவும் உதவுகிறது. ஆதிவலதின் பிரதான இயங்குதளங்களாக ஊடகங்கள் மாறுகின்றன.

உலகளாவிய தெற்கில் தீவிர வலதுசாரிகளைப் புரிந்துகொள்வதற்கு, அது ஜிஹாதிசத்திற்கான பதில் என்ற எண்ணத்திற்கு அப்பால் பார்க்க வேண்டும், ஆனால் வரலாற்று வேர்களை ஒப்புக்கொள்வது மற்றும் தனிப்பட்ட மற்றும் தீவிர வலதுசாரி இயக்கங்கள் பிராந்தியம் மற்றும் முழுவதும் ஆஃப்லைன் மற்றும் ஆன்லைனில் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பதைப் புரிந்துகொள்வதும் அவசியம்.

அதேவேளை புலம்பெயர்ந்தோர் தீவிரவாத சித்தாந்தத்தை வலுப்படுத்துகின்றனர் என்ற உண்மையையும் ஏற்றாக வேண்டும். எடுத்துக்காட்டாக, புலம்பெயர்ந்த இந்தியர்கள் இந்தியாவில் இந்துத்துவா சித்தாந்தத்திற்கு பங்களித்தது மட்டுமல்லாமல், அவர்கள் குடியேறிய நாடுகளில் இந்த தீவிர வலதுசாரி சித்தாந்தங்களை ஊக்குவித்து மேற்கத்திய சமூகங்களில் உள்ள தீவிர வலதுசாரி குழுக்களுடன் எவ்வாறு ஈடுபடுகிறார்கள் என்பதை ஆராய்ச்சி காட்டுகிறது.

மேலும், பல்வேறு பான்-ஆசிய தீவிர வலதுசாரி இயக்கங்கள் மேற்கத்திய வலதுசாரி சித்தாந்தங்களால் ஈர்க்கப்பட்டு 'ஆசியர்களுக்கான ஆசியா வை ஊக்குவிக்கும் ஆன்லைன் அமைப்பை உருவாக்கி வருவதாக தகவல்கள் உள்ளன. தென்னாசிய புலம்பெயர் சமூகங்களின் அதிவலது நடத்தை நன்கறியப்பட்டதே.

உலகளாவிய தெற்கில் வலதுசாரி தீவிரவாதம் எவ்வாறு உருவாகியுள்ளது என்பதை மறுகட்டமைக்க, சிறுபான்மையினருக்கு எதிரான தாக்குதல்களுக்கு அரசாங்கங்கள் எவ்வாறு பதிலளிக்கின்றன என்பதைப் பற்றிய ஒரு விமர்சனப் பார்வை தேவைப்படுகிறது.

பல நாடுகளில் அரசாங்கங்கள் அதிவலது வன்முறையைக் கண்டும்காணாமல் விடுகின்றன. அதிவலது தீவிரவாதிகளால் நடத்தப்படும் குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பது வழக்கமாகிவிட்டது. அர்த்தமுள்ள பொறுப்புக்கூறல் இல்லாமை, ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மையினரை மேலும் தீவிரமயமாக்குவதற்கும் வன்முறையின் சுழற்சிக்கும் வழிவகுக்கும்.

தீவிர அதிவலது இயக்கங்கள் 'மேற்கத்திய பிரச்சனை' என்று கருதப்படும் வரை, உலகளாவிய தெற்கில் அவர்களின் அச்சுறுத்தல் குறைத்து மதிப்பிடப்படும். அது இன்று ஒருவகையில் இது அரசாங்கங்கள் அதிவலதின் செயற்பாடுகளைக் கவனியாது விடுவதற்கான நல்ல சாட்டாக உள்ளது. ஆசியாவில் தீவிர வலதுசாரிகளின் எழுச்சி வெறுமனே ஒரு தேசியப் பிரச்சனை அல்ல, ஆனால் பிராந்தியம் முழுவதும் பல்வேறு இனச் சிறுபான்மையினர் மற்றும் பிராந்தியத்திற்கு வெளியே புலம்பெயர் சமூகங்கள், குறிப்பாக அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பா முழுவதும் இருப்பதால், எளிதில் பிராந்திய தாக்கத்தை ஏற்படுத்தலாம். இந்த தீவிர வலதுசாரி சித்தாந்தங்களில் சில திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றன.

இலங்கை போன்ற தென்னாசியச் சூழலில் அதிவலதை எவ்வாறு எதிர்கொள்வது என்ற வினா முக்கியமானது. இதற்கு சில அடிப்படைப் புரிதல்கள் அவசியம். முதலாவது, இந்த அதிவலது இயக்கங்கள் அதிகாரத்தில் உள்ளன அல்லது அதிகாரத்தின் வாசலில் உள்ளன என்பதையும், தேர்தல் மூலமாகவோ அல்லது வேறு வழிகளில் அதிகாரத்தைப் பெற்றவுடன், அதை விட்டுக்கொடுக்கும் எண்ணம் அவர்களுக்கு இல்லை என்ற உண்மையை ஏற்றாக வேண்டும்.

1932-33ல் ஜனநாயக தேர்தல் மூலம் ஆட்சிக்கு வந்த ஹிட்லரிடம் இருந்து இந்த இயக்கங்கள் கற்றுக்கொண்ட முக்கிய பாடம் ஒன்று இருந்தால், அது இதுதான். பாஜக தலைவர் அமித் ஷா, அடுத்த ஐம்பது ஆண்டுகளுக்கு தனது கட்சிதான் ஆட்சியில் இருக்கும் என்று தம்பட்டம் அடித்துள்ளார். இலங்கையில் கோத்தபாயாவை ஆதரித்த வியத்மக இவ்வகைப்பட்ட சிந்தனையிலேயே இயங்கியது. ஆகவே, அவர்கள் தேர்தல்களில் வெற்றிபெறாமல் தடுப்பது மிகவும் முக்கியமானது.

இரண்டாவது, பெண்களின் உரிமைகளுக்காக உலகெங்கிலும் போராடிக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் அதிவலது கட்சிகளும் ஆளுமைகளும் வலுவாக பெண் வெறுப்புணர்வைக் கொண்டுள்ளனர். எனவே, அதிவலது எதிர்ப்பு இயக்கத்தின் அரசியலில் பெரும் எண்ணிக்கையிலான பெண்கள் முக்கிய பங்கு வகிப்பது மிகவும் முக்கியமானதாகும்.

தொடரும்

## கடிதங்கள்

### தற்காலிகமாக புனரமையுங்கள்

கிளிநொச்சி முக்கொம்பன் வீதியினை தற்காலிகமாக புனரமைப்பதற்கு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு நடவடிக்கை எடுக்க வேண்டுமென முக்கொம்பன் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கந்தபுரத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரையான வீதி தற்காலிகமாக புனரமைக்கப்படும் நிலையில் இதன் தொடர்ச்சியாக வயல் வெளி ஊடாக, முக்கொம்பன் செல்லும் வீதியில் மூன்று வரையான பெருங்குழிகள் காணப்படுகின்றன.

இக்குழிகள் கிரவல் மூலம் நிரப்புவதன் மூலம் தடைப்பட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து யாழ்ப்பாணத்திற்கான பயணத்தினை தொடர முடியும்.

கடந்த ஓராண்டுகளுக்கு முன்னர் இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளரினால் கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான வீதியினை நிரந்தர புனரமைப்புக்கு முன்னர் தற்காலிகமாக புனரமைக்கப்பட வேண்டும். அதிலும் வீதியில் காணப்படுகின்ற குழிகள் மூடப்பட்டாலே பேருந்து பயணத்தினை தொடர முடியும் எனவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது கந்தபுரத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றர் வரையான வீதியே தற்காலிக புனரமைப்புகள் நடைபெறும் நிலையில் மிகுதி மூன்று கிலோ மீற்றர் வரையான வீதியினையும் தற்காலிகமாக புனரமைப்பதன் மூலம் ஓராண்டுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து பணி தொடரக் கூடிய நிலைமை ஏற்படுமென முக்கொம்பன் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

நடராசா கிருஸ்ணகுமார்

# SLT-MOBITEL'இன் eChannelling இனால் Medicare 2023 கண்காட்சிக்கு அனுசரணை




eChannelling இனால், அண்மையில் இடம்பெற்ற சுகாதாரப் பராமரிப்பு கண்காட்சியான Medicare 2023 நிகழ்வுக்கு அனுசரணை வழங்கப்பட்டிருந்தது. பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) அண்மையில் இடம்பெற்ற இந்த கண்காட்சியில் B2C மற்றும் B2B பிரிவுகளைச் சேர்ந்த பங்குபற்றுநர்கள் பங்கேற்றிருந்தனர். வியாபாரம் மற்றும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகளில் eChannelling இன் திறனை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது.

இலங்கையில் டிஜிட்டல் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் பிரவேசித்திருந்த முதலாவது மென்பொருள் வடிவமைப்பு மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் வழங்குநர் எனும் வகையில், கடந்த காலங்களில் eChannelling இனால், புத்தாக்கமான தீர்வுகள் வழங்கப்பட்டு, சுகாதாரப் பராமரிப்புத் துறையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. மேலும், அதிகளவு கவனத்தை ஈர்த்திருந்த Mindrone தொழில்நுட்பத்தினூடாக, ட்ரோன் கட்டமைப்பில் இணைக்கப்பட்ட தனிநபர்களில் உறுதித்தன்மை பகுப்பாய்வு மற்றும் அழுத்த முகாமைத்துவத்தை குறைத்துக் கொள்ளல் போன்றவற்றில் தொழில்நுட்பத்தினால் எவ்வாறு பங்களிப்பு வழங்கப்படலாம் என்பது விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

நிகழ்வில் மொபிடெல் பிரைவட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென மற்றும் இதர விருந்தினர்கள் பலரும் கலந்து கொண்டனர். கண்காட்சியுடன் கைகோர்த்து, eChannelling இனால், உள்நாட்டு மற்றும் சர்வதேச வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ நிலையங்களுடனான உறவுகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டிருந்ததுடன், டிஜிட்டல் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் தனது ஆழமான அறிவு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்தது.

இலங்கை சுகாதார அமைப்பு மற்றும் விசேட வைத்திய சம்மேளனங்கள் இணைந்து ஏற்பாட்டுக் குழுவினால் Medicare 2023 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சரியான நேரத்தில் பொது மக்கள் மத்தியில் சரியான சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டு இது அமைந்திருந்தது. நவீன சுகாதாரப் பராமரிப்பு, நோய் தவிர்ப்பு, வினைத்திறனான சிகிச்சை முறைகள், புதிய தொழில்நுட்பம் மற்றும் இலங்கையின் வைத்தியசாலைகள் மற்றும் ஆய்வுகூடங்களில் காணப்படும் பிந்திய சேவைகள் மற்றும் சர்வதேச மருத்துவத் துறையில் காணப்படும் பிந்திய தொழில்நுட்பங்கள் போனற்வற்றை வெளிப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி அமைந்திருந்தது.

ஸ்தாபிக்கப்பட்டது முதல், இலங்கையின் சுகாதாரப் பராமரிப்புத் துறையில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்துவதில் eChanneling பங்களிபபு வழங்கியிருந்தது. பொது மக்கள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு சேவைகள் வழங்குநர்கள் மத்தியில் காணப்படும் இடைவெளியை நிவர்த்தி செய்து, டிஜிட்டல் சுகாதார தீர்வுகளை மேம்படுத்தி, பாவனையாளருக்கு நட்பான முறையில் வினைத்திறனான சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதில் கவனம் செலுத்தியிருந்தது. இந்தப் பிரிவில் கடந்த 2 தசாப்த காலமாக நிறுவனம் பேணி வரும் ஆதிக்கத்தினூடாக, பெருமளவு சந்தைப் பங்கை தன்வசம் கொண்டிருப்பதுடன், இலங்கையின் முன்னணி சுகாதாரப் பராமரிப்பு மற்றும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகளை புதிய மட்டத்தில் பெற்றுக் கொடுப்பதில் முன்னிலையில் திகழ்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# செலான் வங்கியின் 35 வருட பூர்த்திக் கொண்டாட்டம்




1988 ஆம் ஆண்டு தனது சேவைகளை ஆரம்பித்திருந்த, செலான் வங்கி, வாடிக்கையாளர்களுக்கான தனது 35 வருட கால சேவைப் பூர்த்தியை கொண்டாடுகின்றது. சகல பங்காளர்களுக்கும் ஒப்பற்ற அர்ப்பணிப்புடன் சிறப்பைப் பெற்றுக் கொடுத்த வண்ணமுள்ளது.

இச் சிறப்பைக் குறிக்கும் விசேட வைபவம், வங்கியின் மில்லேனியம் கிளையில் அண்மையில் சமய அனுஷ்டாங்களுடன், ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்வில், பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள், கூட்டாண்மை நிர்வாகத்தினர், ஊழியர்கள் மற்றும் நலன்விரும்பிகள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் விசேட அதிதியாக கலந்து கொண்ட இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி. பி. நந்தலால் வீரசிங்க, நிகழ்வில் பிரதம உரையை ஆற்றியிருந்தார். செலான் வங்கியின் தலைவர் ரவி டயஸ் மற்றும் வங்கியின் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கபில ஆரியரட்ன ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றியிருந்தனர்.

செலான் வங்கி தனது முதல் கிளையை ஆரம்பித்தது முதல், நாடளாவிய ரீதியில் தனது கிளை வலையமைப்பை விஸ்தரிப்புச் செய்துள்ளதுடன், தனது 171 கிளைகள், 216 ATMகள், 70 பண வைப்பு இயந்திரங்கள் மற்றும் 96 காசோலை வைப்பு இயந்திரங்கள் மற்றும் பல டிஜிட்டல் வங்கிச் சேவை தீர்வுகள் ஆகியவற்றைக் கொண்டு, வளர்ந்து செல்லும் சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்கள், தனிநபர் மற்றும் கூட்டாண்மை வியாபார வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றது.



# யூனியன் அஷ்யூரன்ஸ் விளையாட்டு தினம்

யூனியன் அஷ்யூரன்ஸ், தனது கலாசாரப் பெறுமதிகளை கொண்டாடும் வகையில், தனது விளையாட்டு தினத்தை அண்மையில், கொழும்பு விமானப் படை மைதானத்தில் முன்னெடுத்திருந்தது. நிறுவனத்தின் நான்கு விளையாட்டு இல்லங்களும் இந்த நிகழ்வில் போட்டியிட்டிருந்தன. இதன் போது, Challengers அணி சம்பியன்களாக தெரிவாகியிருந்ததுடன், இரண்டாமிடத்தை Giants பெற்றுக் கொண்டது. இந்த விளையாட்டுப் போட்டியில் Titans மற்றும் Royals இல்லங்களும் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருந்தன.

யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃவ் கருத்துத் தெரிவிக்கையில், "இலக்குகளை எய்துவதற்கான எமது உறுதியான இணைவு மற்றும் ஈடுபாடு போன்றவற்றினூடாக இந்நிகழ்வு மிகவும் சிறப்பானதாக அமைந்திருந்தது. இந்த விளையாட்டு தினத்தினூடாக, அணி அங்கத்தவர்கள் மத்தியில் நம்பிக்கை மற்றும் நட்புணர்வு மேம்படுத்தப்பட்டிருந்தது. ஊழியர்கள் தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்துவதில் முழு மூச்சுடன் செயலாற்றியிருந்ததனூடாக, வெற்றியீட்டும் நிறுவனம் என்பது மேலும் உறுதி செய்யப்பட்டிருந்தது." என்றார்.

இந்த குதூகலமான நிகழ்வில் அனைத்து ஊழியர்களையும் பங்கேற்குமாறு அழைக்கப்பட்டிருந்தனர். பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கம் (DE&I) ஆகியவற்றை உணர்த்துவதாக இந்நிகழ்வு அமைந்திருந்தது. பயில்வதற்கும் வளர்ச்சிக்கும் வாய்ப்புகளை வழங்குவது, தொழில்நிலை வெற்றியை ஊக்குவிப்பது மற்றும் பொதுவான இலக்கை நோக்கி ஒன்றிணைந்து செயலாற்றுவது போன்றவற்றுக்கான பணிக் கலாசாரத்தை வலுவூட்டுவதற்கான நற்பெயரை யூனியன் அஷ்யூரன்ஸ் பெற்றுக் கொண்டுள்ளது.



## 99 வது துறவற தினம்

இன்று(05) வெள்ளிக்கிழமை சித்ரா பௌர்ணமி தினம். இத்தகைய தினத்தில் தான் உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் துறவறம் பூண்டார். 1924 ஆம் ஆண்டு சித்ரா பௌர்ணமியில் தனது 30 ஆவது வயதில் துறவறம் பூண்ட சுவாமிகளின் துறவறத்துக்கு இன்று (05) வயது 99

வி.ரி.சகாதேவராஜா




## போதைக்கு எதிர்ப்பு...

மட்டக்களப்பு மாவட்ட செயலகம், ஏறாவூர் நகர பிரதேச செயலகம், இலங்கை இராணுவம் மற்றும் இலங்கை பொலிஸார் இணைந்து போதைக்கு எதிரான சுவரொட்டி பிரசாரமும், துண்டு பிரசுர விநியோக நிகழ்வும் ஏறாவூர் பொலிஸ் நிலைய சந்தியில் ஏறாவூர் நகர பிரதேச செயலாளர் நிஹாரா மௌஜூத் தலைமையில், புதன்கிழமை (03) இடம்பெற்றது.

எம் எஸ் எம் நூர்தீன்




## பௌத்த கண்காட்சி...

புத்த ரஷ்மி தேசிய வெசாக் விழாவின் ஒரு பகுதியாக இந்தியாவின் செழுமையான பௌத்த பாரம்பரியம் குறித்த சிறப்பு கண்காட்சியை கொழும்பு-02, கங்காராமய விஹாரையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் ஏற்பாடு செய்துள்ளது.

## ஆரியகுளத்தினுள்...

யாழ்ப்பாணம் நாக விஹாரைக்கு அருகிலுள்ள ஆரிய ஆரியகுளத்தினுள்ளும் வெசாக் நிகழ்வுகளுக்கான அலங்காரங்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நிதர்ஷன் வினோத்





## கௌரவிப்பு...

அப்துல் கலாம் நம்பிக்கை நிதியத்தின் வளர்ச்சிக்காக திறன்பட உழைத்தவர்களை கௌரவிக்கும் நிகழ்வு, நிதியத்தின் தலைவரான சமூக சேவகர் என். கருணாகரன் தலைமையில் கண்டி ரோயல் கண்டியன் ஹோட்டலில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன் தலைமையில் இடம்பெற்றது .

(மொஹொமட் ஆஸிக்)


திருச்சி

# மாணவனுக்குப் பாலியல் தொல்லை: ஆசிரியை கைது

திருச்சி மாவட்டம், வலையப்பட்டியை சேர்ந்த கணித பாட ஆசிரியையொருவர் தன்னிடம் கல்வி கற்கும் மாணவனொருவனுக்கு நீண்ட காலமாகப் பாலியல் தொல்லை கொடுத்து வந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கணவனைப் பிரிந்து வாழும் குறித்த ஆசிரியை தனது வீட்டில் மேலதிக வகுப்புகளை நடத்தி வந்துள்ளார்.

இந்நிலையில் குறித்த ஆசிரியை தன்னிடம் கல்வி கற்கும் 10 ஆம் வகுப்பு மாணவனுடன் இரவு வேளைகளில் நீண்ட நேரம் உரையாடி வந்துள்ளதுடன், அம்மாணவனுக்கு பல முறை பாலியல் தொந்தரவும் அளித்து வந்துள்ளார்.



இந்நிலையில் மகன் அதிக நேரம் தொலைபேசியில் செலவிடுவதையும், படிப்பில் கவனம் இல்லாது இருப்பதையும் பார்த்த பெற்றோர் இது குறித்து மகனிடம் தீவிரமாக விசாரிக்கவே இச்சம்பவம் அம்பலமாகியுள்ளது.

இதனையடுத்து அம்மாணவனின் பெற்றோர் இது குறித்து உடனடியாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இப்புகாரினையடுத்து பொலிஸார் குறித்த ஆசிரியையை சிறையில் அடைத்தனர்.

டெல்லி

# பாலியல் விவகாரம்; மல்யுத்த வீரர்கள் மீது தடியடி

இந்திய மல்யுத்த கூட்டமைப்பின் தலைவர் பிரிஜ் பூஷண் சரண் சிங்கிற்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் குற்றச்சாட்டு விவகாரத்தில் மல்யுத்த வீரர், வீராங்கனைகள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் டெல்லி ஜந்தர் மந்தர் பகுதியில் கடந்த 11 நாட்களாக பாலியல் வன்கொடுமைக்கு எதிராகப் போராட்டம் நடத்தி வரும் மல்யுத்த வீரர் வீராங்கனைகளை பொலிஸார் தடியடி நடத்தி கலைக்க முயன்றதால் அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது.



பகலெல்லாம் கொட்டிய மழையால் அவதிப்பட்ட போராட்டக்காரர்கள் இரவில் அமைதியாக உறங்குவதற்காக ஆம் ஆத்மி கட்சி கயிற்றுக்கட்டில்களை ஏற்பாடு செய்து தந்தது.

ஆனால் பொலிஸார் கட்டிலைக் கொண்டுசெல்ல அனுமதிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதையடுத்து பொலிஸாருடன் ஏற்பட்ட மோதலில் ஏராளமான வீரர் வீராங்கனைகள் தாக்கப்பட்டு காயம் அடைந்ததாகவும் ஒருவர் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாகவும் மல்யுத்த வீரர்கள் தெரிவித்தனர்.

சில முன்னணி வீராங்கனைகள், மதுபோதையில் வந்த பொலிஸாரால் மானபங்கப்படுத்தப்பட்டதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர்.


செர்பியா

# பாடசாலையில் துப்பாக்கிச் சூடு; 8 மாணவர்கள் உயிரிழப்பு

செர்பியாவின் தலைநகரான பெல்கிரேடில் உள்ள பாடசாலையொன்றில் நேற்று முன்தினம் (03) மாணவனொருவன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 8 மாணவர்கள் உட்பட 9 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவ தினத்தன்று 7 ஆம் வகுப்பு படிக்கும் மாணவன் ஒருவனே இவ்வாறு தனது ஆசிரியரை சுட்டதாகவும் பின்னர் சக மாணவர்கள், பாதுகாவலர் உள்ளிட்டோரைச் சுட்டதாகவும் இதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் பல மாணவர்களும் ஆசிரியர்களும் காயம் அடைந்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து குறித்த மாணவனைக் கைது செய்த பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



ஆரம்ப கட்ட விசாரணையில் குறித்த மாணவன் ஒரு மாதகாலமாகத் திட்டமிட்டு குறித்த படுகொலையை அரங்கேற்றியுள்ளமை தெரியவந்துள்ளது.

பிரித்தானியா

# முடிசூட்டு விழா ஆடை இதுதான்

பிரித்தானியாவின் மன்னர் 3 ஆம் சார்லஸ், தனது முடிச்சூட்டு விழாவின்போது அணியவுள்ள ஆடையின் புகைப்படமானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

பிரித்தானியாவில் 70 ஆண்டுக்குப் பிறகு மே 6 ஆம் திகதி வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் மன்னர் மூன்றாம் சார்லஸின் முடிசூட்டு விழா நடைபெறவுள்ளது. இதனால் மொத்த பிரித்தானியாவுமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்நிலையில் முடிசூட்டு விழாவில் மன்னர் மூன்றாம் சார்லஸ் அணிய உள்ள தங்கத்திலான பட்டு ஆடைகள் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது.

இதில் ஒரு ஆடை 1821 ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்டதாகும். அப்போதைய மன்னர் ஜார்ஜ்-க்காக வடிவமைக்கப்பட்டது. மற்றொரு ஆடை இரண்டாம் எலிசபெத்திற்காக வடிவமைக்கப்பட்டதாகும். நூற்றாண்டு பாரம்பரியமிக்க ஆடைகள் மீண்டும் மன்னருக்காக தயார் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# இப்படியும் ஒரு கின்னஸ் சாதனையா?

பிரித்தானியாவைச் சேர்ந்தவர் ஜேம்ஸ் கோஷ் என்ற 27 வயதான நபர் முகத்தில் அதிகப்படியான துளைகளையிட்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்துள்ளார்.

இவர் முன்னதாக முகத்தில் 15 துளைகளையிட்டு கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பிடித்திருந்தார். தற்போது அதனை 17 ஆக உயர்த்தி தன்னுடைய சொந்த சாதனையை அவரே முறியடித்துள்ளார்.

இந்நிலையில் இது குறித்து ஜேம்ஸ் கோஷ் பேசுகையில், என்னுடைய சாதனை குறித்து யார் என்ன நினைப்பார் என்ற கவலை எனக்கு இல்லை. நான் அதைப் பற்றி யோசிக்கவும் இல்லை. நான் என்ன செய்கிறேன் என்பதே எனக்கு முக்கியம்" இவ்வாறு கூறியுள்ளார்.



# ஐ.பி.எல்: பஞ்சாப்பை வென்ற மும்பை

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு- 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), மொஹாலியில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் உடனான போட்டியில் மும்பை இந்தியன்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மும்பை

பஞ்சாப்: 214/3 (20 ஓவ) (துடுப்பாட்டம்: லியாம் லிவிங்ஸ்டன் ஆ.இ 82 (42), ஜிதேஷ் ஷர்மா ஆ.இ 49 (27), ஷீகர் தவான் 30 (20), மத்தியூ ஷோர்ட் 27 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: பியூஷ் சாவ்லா 2/29 [4], கமரொன் கிறீன் 0/15 [2], குமார் கார்த்திகேயா 0/24 [3])

மும்பை: 216/4 (18.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: இஷன் கிஷன் 75 (41), சூரியகுமார் யாதவ் 66 (31), திலக் வர்மா ஆ.இ 26 (10), கமரொன் கிறீன் 23 (18), டிம் டேவிட் ஆ.இ 19 (10) ஓட்டங்கள்.



பந்துவீச்சு: நாதன் எலிஸ் 2/34 [4], றிஷி தவான் 1/20 [3])

போட்டியின் நாயகன்: இஷன் கிஷன்

இதேவேளை முன்னதாக லக்னோவில் நடைபெற்ற லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ், சென்னை சுப்பர் கிங்ஸுக்கிடையிலான போட்டியில் மழை காரணமாக முடிவேதும் கிடைக்கவில்லை.

இந்நிலையில். ஜெய்ப்பூரில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் நடப்புச் சம்பியன்களான குஜராத் டைட்டன்ஸை ராஜஸ்தான் றோயல்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

# பரிஸ் ஸா ஜெர்மைனிலிருந்து வெளியேறும் மெஸ்ஸி



பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி, நடப்புப் பருவகால முடிவில் தனது தற்போதைய ஒப்பந்த முடிவில் கழகத்திலிருந்து வெளியேறவுள்ளார்.

பரிஸ் ஸா ஜெர்மைனில் இன்னும் ஓராண்டு தொடர இணங்கியபோதும், கழகமோ அல்லது மெஸ்ஸியோ ஒப்பந்தத்தில் தற்போது கைச்சாத்திட விரும்பவில்லை. சம்பியன்ஸ் லீக்கில் கழகம் போட்டியிடுமென்று மெஸ்ஸி நம்பவில்லையென்பதுடன், இளம் வீரர்களை வளர்க்கவே கழகம் விரும்புகின்றது.



## இத்தாலிய சீரி ஏ தொடர்:

# சமநிலையில் மிலன் கிரமொனெஸ்ஸே போட்டி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்ளுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற கிரமொனெஸ்ஸேயுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் சமப்படுத்தியது.

இதேவேளை, மொன்டானாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் றோமா சமப்படுத்தியது.

சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் 79 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நாப்போலி காணப்படுகின்றது. 64 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் லேஸியோவும், 63 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் ஜுவென்டஸும், 60 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் இன்டர் மிலனும் காணப்படுகின்றது. இதில், நாப்போலி ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

## காரைதீவு கூடைப்பந்தாட்டத் தொடர்:

# இறுதிப் போட்டி இன்று

காரைதீவில் நடைபெற்று வந்த கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியானது காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நாளை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ள நிலையில், காரைதீவு கூடைப்பந்தாட்டக் கழகமும், மட்டக்களப்பு சிவானந்தா விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடாத்துகின்றன.

## நியூசிலாந்துக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றிய பாகிஸ்தான்

நியூசிலாந்துக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை பாகிஸ்தான் கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த பாகிஸ்தான், கராச்சியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் இரண்டு போட்டிகள் இருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் அணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். நியூசிலாந்து சார்பாக ஒருநாள் சர்ர்வதேசப் போட்டிகளில் கோல் மக்னோச்சி அறிமுகத்தை மேற்கொண்டிருந்தார்.



அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், இமாம்-உல்-ஹக்கின் 90 (107), அணித்தலைவர் பாபர் அஸாமின் 54 (62), மொஹமட் றிஸ்வானின் 32 (34), அக்ஹா சல்மானின் 31 (29), ஷடாப் கானின் ஆட்டமிழக்காத 21 (10) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 287 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், மற் ஹென்றி 3, அடம் மில்ன் 2, மக்னோச்சி ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 288 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 261 ஓட்டங்களையே பெற்று 26 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில், டொம் பிளன்டல் 65 (78), மக்னோச்சி ஆட்டமிழக்காமல் 64 (45), லேதம் 45 (60), வில் யங்க் 33 (41) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நசீம் ஷா, ஷகீன் ஷா அஃப்ரிடி, மொஹமட் வாஸிம் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், சல்மான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக இமாம்-உல்-ஹக் தெரிவானார்.

இந்நிலையில், இன்று பிற்பகல் 4 மணிக்கு இரண்டு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 05 மே 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.